# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,910—1970 ජූනි 11 වැනි බ්‍රහස්පතින්දා—1970.6.11

14,910 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூன் மாதம் 11 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் | — | விலைக்கட்டளைகள் | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 335 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 335 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 336 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 336 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 194

எண். டி. 264/ஆர்ஈசிரி/பி.

### தரைப்படை—நிரந்தரப்படை—தமது பதவிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்—மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதி அவர்களால் மீள வேலைக்கமர்த்தல்

தத்தமது பதவிக் கடமைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த கீழ்க் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர், 1970, மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து மீள வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் :

கப்ரின் துலீப்சிங் உபவன்ச வீரசிங்க, சி.எ.

கப்ரின் பிரசன்ன குணசிலு செபால பண்டித தகநாயக்க, சீ.எஸ்.ஆர்.

கப்ரின் லியனகே குணசோம சிகேரா, சி.எ.ஓ.சி.

லெவ்ரினன்ற் ஆர்தர் ரஞ்சித் பெரேரா விஜயரத்ன, சீ.எஸ்.ஆர்.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

6–242

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 195

இல. : ஈபி/எ. 204/3.

1950 யூலை மாதம் 14 ம் தேதிய 10,123 ம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 2) 10ஆ என்னும் விதியின் கீழ் தனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் பின்வரும் நியமனங்களைச் செய்திருக்கின்றார் என்பதைப் பொது மக்களின் கவனத்திற்கு அறியத் தரப்படுகின்றது :—

அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் குறித்த மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபராகப் பதில் கடமை புரியும் ஆர். பி. ரத்னதுங்க அவர்கள், தனது சொந்தக் கடமைகளுடன் அநுராதபுர மேலதிக உதவிச் சிறைக் கூட அதிகாரியாகவும் 1970 எப்பிரல் மாதம் 7 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கடமைபுரிய.

கண்டி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ், குறித்த மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபராகப் பதில் கடமை புரியும் எல். எ. உடுவெல அவர்கள், தனது சொந்தக் கடமைகளுடன் கண்டி மாவட்டத்து பிரதி பிஸ்காலாகவும் 1970 மே மாதம் 9 ம் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கடமை புரிய.

எ. ஐ. மொஹிதீன்,
நிரந்தரச் செயலாளருக்காக.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
ரொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1970 மே மாதம் 25 ம் தேதி.

6–106

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

## அரசாங்க அறிவித்தல்கள்

எண். டி. 39/பி/சீஈஆர் (iii)

1934 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதி 8,029 ஆம் இலக்க இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கியைய தரைப்படையின் தொண்டர் படையின் கீழ்க்காணும் ஆளணியினருக்கு, வினைத்திறமை (இலங்கை) பதக்கம் அத்துடன்/அல்லது அவற்றுக்குரிய உலோகப் பட்டிகள் ஆகியவற்றை வழங்குவதில அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள்.

**வினைத்திறமைப் பத்தக்கம் (இலங்கை)**

1312 ஸ்டாவ் சார்ஜெனட் கொத்தலாவல, டொன் எதிரிசேன,
சி. ஏ. எம். சி. (வி.)

**2 வது உலோகப் பட்டிகள்**

1040 உவாறன்ற் ஒபிசர் 11 கொடமுனே, ஜோசேப் செல்வேரியஸ்.
சி. ஏ. எம். சி.(வி.)

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 22 ந் உ.

6–161

---

### அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டம்

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ம் அத்தியாயத்தில்) 16 ம் பிரிவின் கீழ் அஞ்சற் தந்தித் தொடர்புகள் அமைச்சரினாலாக்கப்பட்ட விதி.

சி. குமாரசூரியர்,
அஞ்சற்தந்தித்
தொடர்புகள் அமைச்சர்.

கொழும்பு, 6.6.1970.

**விதி**

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ம் அத்தியாயமான) 16 ம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ம் ஆண்டு ஒகத்து 5 ஆம் தேதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 1970 ம் ஆண்டு மே 8 ம் திகதிய 14,905 ஆம் இலக்க வர்த்தமானியில் கடைசியாக திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டவணையின் 76 ம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அம்சங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

" 77. 1970, ஆசிய உற்பத்திவள ஆண்டை நினைவு கூரும் முகமாக, விவசாய கைத்தொழில் உற்பத்தி இலச்சினைகளைக் குறிக்கும் 60 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி முத்திரைகள். "

6–318

---

### முத்திரைக் கட்டளைச் சட்டம்

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ஆம் அத்தியாயமான) 6 ம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினாலாக்கப்பட்ட விதி.

எம். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு, 3.6.1970.

**விதி**

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ஆம் அத்தியாயமான) 6 ம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஒகத்து 5 ஆம் தேதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமாயினில் வெளியிடப்பட்டதும் 1970 ஆம் ஆண்டு மே 8 ம் தேதிய 14,905 ம் இலக்க வர்த்தமானியில் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டவணையின் 75 ம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அம்சங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

" 76. 1970, ஆசிய உற்பத்திவள ஆண்டை நினைவு கூரும் முகமாக, விவசாய கைத்தொழில் உற்பத்தி இலச்சினைகளைக் குறிக்கும் 60 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி முத்திரைகள். "

6–317

எல். டீ.–பீ. 12/68

### 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டம்

**57 ஆம் பிரிவின்கீழான கட்டளை**

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 57 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, இராசாங்க அமைச்சர் ஜூனியஸ் றிச்சாட் ஜெயவர்தன ஆகிய நான், வெந்தொட்டைத் தேசிய விடுமுறைத் தலத்துக்குத் தல அதிகாரசபையொன்றினை இதன்மூலம் அமைத்து, அதற்கு வெந்தொட்டைத் தல அதிகாரசபை ஆகிய பெயரைக் குறித்தொதுக்குகிறேன்.

ஜே. ஆர். ஜெயவர்தன,
இராசாங்க அமைச்சர்.

கொழும்பு, 16.5.1970.

6–156

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாகவிருந்த திரு. ஜீ. ஏ. பியதாச என்பவர் தாமாக விலகியதால், அவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. ஈ. எல். டீ. எஸ். நாணயக்கார என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் கனம் தொழில், தொழில் வசதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. பீ. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில், தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மாதம் 23 ந் தேதி

6–149

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1970, ஆசிய உற்பத்திவள ஆண்டை நினைவுகூருமுகமாக விசேட முத்திரைகளின் வெளியீடு

1970, ஆசிய உற்பத்திவள ஆண்டை நினைவுகூருமுகமாக 1970 ம் ஆண்டு ஜூன் 17 ம் திகதி 60 சதப் பெறுமதியுடைய விஷேட முத்திரைகள் வெளியிடப்படுமென இத்தால் பொதுச் செய்தியாக அறிவிக்கப்படுகின்றது. இம்முத்திரைகள் 1970 ம் ஆண்டு டிசம்பர் 31 ந் திகதிவரை அல்லது கையிருப்பு முத்திரைகள் முடியும் வரையும் இதில் எது முந்தியதோ அதுவரை விற்பனைக்கிருக்கும். இக்காலத்தில் தற்பொழுது விற்பனையில் இருக்கும் 60 சதப் பெறுமதியுடைய முத்திரைகளின் விற்பனவு இடைநிறுத்தப்படும்.

2. இம்முத்திரையில் விவசாய, கைத்தொழில் உற்பத்திச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

ச. சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 1,
1 ஆனி 1970.

6–190

---

### பிரகடனம்

யாழ்ப்பாணப் பரிபாலன மாவட்டத்தில் வடமராட்சி தென் மேற்கு காரியாதிகாரி பிரிவிலுள்ள புலோலி கிராம சபைக்குட்பட்ட முழுப் பகுதியையும் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு விசர்நாய் சட்டம் 476 ம் அத்தியாயத்தின் 11 ம் பிரிவின்கீழ் இத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்டுள்ள பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் தனியாருக்குச் சொந்தமான கட்டடம், காணி, அல்லது தோட்டம் தவிர்ந்த ஏதாவது ஒரு பொது இடத்திலோ அல்லது வீதியிலோ அல்லது வேறு இடத்திலோ எந்த நாயாவது கட்டப்படாமலோ காணப்பட்டால் அது உடனடியாக அழிக்கப்பட ஏதுவாகும்.

எவ். சீ. பீற்றேர்ஸ்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி.

6–191

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| யூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.